# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 364 | 4 Pages | 26.7.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 364 | 4 பக்கங்கள் | 26.7.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## ராமேசுவரம்தனுஷ்கோடி ரெயில் திட்டத்தை கைவிட்டதே தமிழ்நாடு அரசுதான் மத்திய மந்திரி குற்றச்சாட்டு



புதுடெல்லி, ஜூலை 26

மத்திய அரசின் 20242025ம் ஆண்டுக்கான பட்ஜெட் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இதில் ரெயில்வே பட்ஜெட் விவரங்களை ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் நேற்று மாநிலங்கள் வாரியாக தெரிவித்தார்.

இதன்படி தமிழ்நாட்டுக்கான ஒதுக்கீடு பற்றி அவர் கூறுகையில், "கடந்த 2009 2014ம் ஆண்டு ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் தமிழ்நாட்டு ரெயில்வே மேம்பாட்டு திட்டங்களுக்காக ஆண்டு சராசரி ரூ.879 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் பிரதமர் மோடி ஆட்சியில் இந்த ஆண்டு நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் ரூ.6 ஆயிரத்து 362 கோடி ஒதுக்கி இருக்கிறார். இது முந்தைய ஆட்சியைவிட 7 மடங்கு அதிகம் ஆகும்.

கடந்த 10 ஆண்டுகளில் 1,302 கி.மீ. நீளத்துக்கு புதிய ரெயில்பாதைகள் அமைக்கப்பட்டு உள்ளன. ஆண்டுக்கு குறைந்தபட்சம் 215 கி.மீ. என்ற அடிப்படையில் மொத்தம் 2152 கி.மீ. தூரம் ரெயில் பாதை மின்மயமாக்கப்பட்டு உள்ளது. 687 ரெயில்வே மேம்பாலங்களும், சுரங்கப்பாதைகளும் அமைக்கப்பட்டு உள்ளன. தற்போது 22 புதிய ரெயில்பாதை திட்டங்கள் ரூ.33 ஆயிரத்து 467 கோடிக்கு நடந்து வருகிறது.

அம்பாசமுத்திரம், அம்பத்தூர், சென்னை கடற்கரை, எழும்பூர், பூங்கா, சிதம்பரம், மதுரை, கோவில்பட்டி, ராமேஸ்வரம், நெல்லை உள்பட 77 ரெயில் நிலையங்கள் அம்ரித் ரெயில் நிலையங்களாக மாற்றப்படுகிறது. ரெயில்வே பாதுகாப்பு விஷயங்களுக்காக நாடு முழுவதும் ரூ.1 லட்சத்து 9 ஆயிரம் கோடி செலவிடப்படுகிறது. ரெயில் டிரைவர்கள் விஷயத்தில் அரசியல் காரணங்களுக்காக பிரச்சினை எழுப்பப்படுகிறது. ரெயில் டிரைவர்களுக்கு விதிகளின்படி ஓய்வு, ஏ.சி. அறை உள்ளிட்ட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு உள்ளன. வசதிகள் படிப்படியாக அதிகரிக்கப்படுகிறது.

ராமேசுவரம்தனுஷ்கோடி திட்டம்

தமிழ்நாட்டில் ரெயில்வே திட்டங்களுக்கு நிலம் வழங்கும் பணியில் சுணக்கம் உள்ளது. மத்திய அரசும், மாநில அரசுகளும் இந்த விஷயத்தில் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் இருபக்கமும் பயன்பாடு இருக்கும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 2,749 ஹெக்டேர் நிலம் ரெயில்வேக்கு தேவைப்பட்டது. இதில் 807 ஹெக்டேர் நிலம்தான் கிடைத்து இருக்கிறது.

ராமேசுவரம்தனுஷ்கோடி திட்டத்தை செயல்படுத்துவதற்கு மத்திய அரசு தயாராக இருக்கிறது. ஆனால் நிலம் எடுப்பு பிரச்சினைகளால் அந்த திட்டத்தை கைவிடுவதாக தமிழ்நாடு அரசு கடிதம் எழுதியுள்ளது. ரெயில்வேக்கான ஆட்கள் தேர்வும் இந்த ஆட்சியில் அதிகமாகத்தான் நடந்திருக்கிறது" என்று அவர் கூறினார்.

இதுதவிர ரெயில்களில் ரூ.1,112.57 கோடியில் 'சுவாச்' என்னும் தானியங்கி ரெயில் பாதுகாப்பு சாதனம் பொறுத்த பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ரெயில்வே மந்திரி அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

## இடஒதுக்கீடு பிரிவில் 1,200 பேர் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ்., அதிகாரிகளாக நியமனம் மத்திய அரசு தகவல்



புதுடெல்லி, ஜூலை 26

நாடாளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு மத்திய பணியாளர் துறை இணை மந்திரி ஜிதேந்திர சிங் எழுத்துப்பூர்வமாக பதிலளித்தார். அதில் அவர் கூறியுள்ளதாவது:

"ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஐ.எப்.எஸ்., ஆகியவற்றுக்கான ஆட்சேர்ப்பு சம்பந்தப்பட்ட விதிகளின்படி மத்திய பணியாளர் தேர்வு ஆணையம் (யு.பி.எஸ்.சி) மூலம் செய்யப்படுகிறது. தற்போதுள்ள அறிவுறுத்தல்களின்படி இந்த பணிகளில் எஸ்.சி., எஸ்.டி. மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு முறையே 15 சதவீதம், 7.5 சதவீதம் மற்றும் 27 சதவீதம் என்ற விகிதத்தில் இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. அந்த வகையில் கடந்த 5 ஆண்டுகளில் இடஒதுக்கீடு பிரிவில் 1,195 பேர் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் ஐ.எப்.எஸ். அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்." இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## மோசடி புகாருக்கான ஆதாரம் செந்தில் பாலாஜி வீட்டில் கிடைத்ததா? சுப்ரீம் கோர்ட்டு சரமாரி கேள்வி

புதுடெல்லி, ஜூலை 26

தமிழ்நாடு போக்குவரத்து துறையில் வேலை வாங்கி தருவதான பண மோசடி விவகாரம் தொடர்பாக அமலாக்கத்துறை பதிவு செய்த வழக்கில் முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியை கடந்த ஆண்டு ஜூன் 14ந்தேதி கைது செய்தது. ஓராண்டுக்கும் மேலாக புழல் சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார்.

இந்த வழக்கில் செந்தில் பாலாஜியின் வக்கீல் ராம் சங்கர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் அபய் எஸ்.ஓகா, ஏ.ஜி. மாசி அடங்கிய அமர்வு விசாரித்து வருகிறது. கடந்த விசாரணையின்போது, செந்தில் பாலாஜிக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறை கடந்த 2020 ம் ஆண்டு பிப்ரவரி 2ந்தேதி சோதனையிட்டது. அதில் 'எச்பி ஹார்டு டிஸ்க், லேப்டாப், எஸ்.எஸ்.டி. மெமரி கார்டு, பென்டிரைவ் ஆகிய 5 சாதனங்களை கைப்பற்றியது. இருப்பினும் பென்டிரைவில் அமலாக்கத்துறை சுட்டிக்காட்டும் கோப்பு செந்தில்பாலாஜி வீட்டில் நடத்திய சோதனையின்போது இல்லை என வாதிடப்பட்டது. இதனையடுத்து நேற்று நடத்தப்பட்ட விசாரணையின்போது, நீதிபதிகள் 'ரூ.67.74 கோடிக்கான பணமோசடிக்கான புகாருக்கான ஆதாரமாக கூறப்படும் கோப்பு கைப்பற்றப்பட்ட பென் டிரைவில் இல்லை என்பது செந்தில் பாலாஜியின் வாதமாக உள்ளதே, இந்த கோப்பு எப்படி அமலாக்கத் துறைக்கு கிடைத்தது?' என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு அமலாக்கத் துறை சார்பில் ஆஜரான வக்கீல் சோஹிப் ஹுசைன், 'இந்த பென் டிரைவ் போக்குவரத்து துறையில் வேலைவாங்கி தருவதான லஞ்ச வழக்கை விசாரித்து வரும் மத்திய குற்றப்பிரிவு கைப்பற்றியது. இதுதொடர்பான தகவலை சிறப்பு கோர்ட்டில் அமலாக்கத் துறை கேட்டு பெற்றது' என வாதிட்டார். மீண்டும் நீதிபதிகள், 'கைப்பற்றப்பட்ட பென் டிரைவில் அந்த கோப்பு இருந்ததா?' என கேட்டனர். வக்கீல் சோஹிப் ஹுசைன், 'செந்தில் பாலாஜியின் வீட்டில் அந்த பென் டிரைவ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது' என பதில் அளித்தார்.

இதற்கு நீதிபதிகள், 'கைப்பற்றப்பட்ட பென் டிரைவ் தடயவியல் ஆய்வகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதையும், அதில் பணமோசடி புகார் தொடர்புடைய கோப்பு இருந்ததையும் அமலாக்கத்துறை நிரூபிக்கவேண்டும்' என தெரிவித்து விசாரணையை இன்று (வியாழக்கிழமை) பிற்பகல் 3 மணிக்கு தள்ளி வைத்தனர்.

# காவலர்களுக்கு வாகன சேவை: முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்





சென்னை, ஜூலை 26

காவல்துறையை நவீனபடுத்தும் திட்டத்தின் கீழ் காவலர்களுக்கு அதி நவீன வாகனங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த 1 மாதத்திற்கு முன்பாக காவல்துறையினருக்கு 4 சக்கர வாகனங்களை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கியிருந்தார். அதனை தொடர்ந்து இன்று காவலர்களுக்கு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இருசக்கர வாகன சேவையை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

அதன்படி ரூ.74.08 லட்சம் செலவில் மேம்படுத்தப்பட்ட அதிநவீன வசதிகளுடன் கூடிய 85 இருசக்கர வாகனங்களின் செயல்பாட்டை சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார். அதில், ஆண் காவலர்களுக்கு அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பல்சர் வாகனங்களும், பெண் காவலர்களுக்கு டிவிஎஸ் ஜூபிட்டர் வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றி வரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, புதிய காவல் நிலையங்கள், காவலர் குடியிருப்புகள் கட்டுதல், "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் காவலர்களுக்கு குடியிருப்புகள். பாதுகாப்பு பணிகளுக்காக ரோந்து வாகனங்களை கொள்முதல் செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களைத் அரசு செயல்படுத்தி வருகிறது.

பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க அனைத்து காவல் உட்கோட்டங்களிலும் மகளிர் காவல் நிலையங்கள் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு மே 2021 முதல் தற்போதுவரை 39 புதிய மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் குறிப்பாக பெண்கள். அவசர காலங்களில் காவல்துறையின் உதவியை உடனடியாக பெறும் பொருட்டு, 60க்கும் மேற்பட்ட சிறப்பம்சங்களுடன் கூடிய "காவல் உதவி" செயலி தொடங்கி வைக்கப்பட்டது. காவல்துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், குழந்தைகள் மீதான குற்ற நடவடிக்கை தடுப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 40 இலட்சம் ரூபாய் மதிப்பிலான ஒளி, ஒலி கட்டமைப்புடன் கூடிய 2 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. பல்நோக்கு பயன்பாட்டு விழிப்புணர்வு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு காவல்துறையில் மகளிர் காவலர்கள் இணைந்து 50 ஆண்டு நிறைவு பெற்றதையொட்டி நடைபெற்ற பொன் விழாவில் சிறப்பு தபால் உறை வெளியிடப்பட்டு, பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அவள் (AVAL Avoid Violence Through Awareness and Learning) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை சென்னை பெருநகர காவல்துறையின் பயன்பாட்டிற்காக 32 கோடியே 53 லட்சத்து 71 ஆயிரம் செலவில் 323 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2023, 2024 ஆம் ஆண்டு காவல் துறை மானியக் கோரிக்கையில், கழிவு செய்யப்பட்ட காவல் துறை வாகனங்களுக்கு பதிலாக ரோந்துப் பணிகளை மேற்கொள்ள 200 புதிய இரு சக்கர வாகனங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சென்னை பெருநகர காவல்துறையின் பயன்பாட்டிற்காக மேம்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய 40 பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனங்கள் 39 லட்சத்து 38 ஆயிரத்து 500 ரூபாய் செலவிலும், 45 டிவிஎஸ் ஜுப்பிட்டர் இருசக்கர வாகனங்கள் 34 லட்சத்து 69 ஆயிரத்து 500 ரூபாய் செலவிலும், என மொத்தம் 85 இருசக்கர வாகனங்கள் 74 லட்சத்து 8 ஆயிரம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாகனங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் சென்னை பெருநகர காவல்துறையின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த இரு சக்கர வாகனங்கள், சென்னை பெருநகரத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் ரோந்து பணி மேற்கொண்டு குற்றங்கள் நிகழாமல் கண்காணித்தல், சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரித்தல், பொது மக்களிடையே பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துதல், குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்களின் பாதுகாப்பில் தனிக்கவனம் செலுத்துதல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்படும்.

நடப்பு நிதி ஆண்டில் (20242025) தமிழ்நாடு காவல்துறைக்கு 46 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவில் 840 வாகனங்கள் வழங்கப்பட உள்ளன. இவற்றில் சென்னை பெருநகர காவல்துறைக்கு மட்டும் 6 கோடியே 93 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் 24 வாகனங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சென்னை பெருநகர காவல் ஆணையர் அருண், மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 2 நாள் சி.பி.சி.ஐ.டி. விசாரணை முடித்து வந்த எம்.ஆர்.விஜயபாஸ்கருக்கு அடுத்த `செக்'



கரூர், ஜூலை 26

நிலமோசடி வழக்கில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் போக்குவரத்துத்துறை அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கரை சி.பி.சி.ஐ.டி. போலீசார் கடந்த 16ம் தேதி கேரள மாநிலம் திருச்சூரில் கைது செய்து, திருச்சி மத்திய சிறையில் அடைத்தனர். இந்த வழக்கு தொடர்பாக எம்.ஆர்.விஜயபாஸ்கரை, காவலில் எடுத்து விசாரணை நடத்த சி.பி.சி.ஐ.டி. போலீசார் கரூர் கோர்ட்டில் மனு அளித்தனர். அப்போது 2 நாள் காவலில் வைத்து விசாரிக்க நீதிபதி உத்தரவிட்டார்.

இதனையடுத்து கடந்த 2 நாட்களாக கரூர் காந்திகிராமத்தில் உள்ள சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் எம்.ஆர்.விஜயபாஸ்கரிடம் சி.பி.சி.ஐ.டி. போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். 2 நாள் விசாரணை முடிந்து நேற்று மதியம் கரூர் கோர்ட்டில் எம்.ஆர்.விஜயபாஸ்கரை சி.பி.சி.ஐ.டி. போலீசார் ஆஜர்படுத்தினர்.

இதற்கிடையே கொலை மிரட்டல் வழக்கு தொடர்பாக வாங்கல் போலீசார் எம்.ஆர்.விஜயபாஸ்கரை கைது செய்திருந்தனர். இந்த வழக்கில் எம்.ஆர்.விஜயபாஸ்கரை போலீஸ் காவலில் விசாரிக்க அனுமதி கேட்டு வாங்கல் போலீசார் கரூர் கோர்ட்டில் மனு அளித்திருந்தனர்.

இந்த மனு மீது நேற்று விசாரணை நடைபெற்றது. அப்போது எம்.ஆர்.விஜயபாஸ்கரை ஒரு நாள் போலீஸ் காவலில் விசாரிக்க அனுமதி அளித்து நீதிபதி பரத்குமார் உத்தரவிட்டார். இதையடுத்து விசாரணைக்காக எம்.ஆர்.விஜயபாஸ்கரை வாங்கல் போலீசார் அழைத்து சென்றனர்.

## திருவட்டார் கோவிலில் ரூ 2 கோடியில் தங்கும் விடுதி பணி தொடக்கம்



கன்னியாகுமரி, ஜூலை 26

குமரி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற கோவில்களில் ஒன்றான திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோவில் 108 வைணவத் தலங்களில் ஒன்றாகும். இது மிகவும் பழமை வாய்ந்த கோயிலாகும். இந்த கோவிலில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து தினமும் ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள். இங்கு தங்கும் விடுதி அமைக்க வேண்டும் என்று பக்தர்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதனை ஏற்று தமிழ்நாடு அறநிலைத்துறை சார்பில் விடுதி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. கோவில் கிழக்குவாசலையொட்டி ரூ. 2. கோடியே 5 லட்சம் மதிப்பீட்டில் 2 ஹால் மற்றும் 6 அறை களுடன் கூடிய இரண்டு மாடி பக்தர்கள் தங்கும் விடுதி அமைக்க நிதி ஒதுக்கப் பட்டது. இந்த நிலையில் தமிழக முதல்வர் ஸ்டாலின் காணொளி மூலம் தங்கும் விடுதிக்கு அடிக்கல் நாட்டினார். அப்போது திரு வட்டார் கோவில் சிறப்பு பூஜை நடத்தப் பட்டது. தொடர்ந்து தங்கும் விடுதி அமைய உள்ள இடத்தில் மாவட்ட அறநிலைய த்துறை இணை ஆணையர் ரத்தினவேல் பாண்டியன், உறுப்பினர் ஜோதிஸ் குமார், திருவட்டாறு பேரூராட்சி தலைவர் பெனிலா ரமேஷ், குழித்துறை தேவஸ்வம்போர்டு சூப்பிரண்டு சிவகுமார், டாக்டர் சந்திர மோகன் ஆகியோர் அடிக்கல் நாட்டினர். தேவஸ்வம் போர்டு மராமத்து அலுவலர் அதீஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வீடுகளை அகற்ற பொதுமக்கள் எதிர்ப்பு பெண்கள் தீக்குளிக்க முயன்றதால் பரபரப்பு



செங்குன்றம், ஜூலை 26

புழல் அடுத்த ரெட்டேரி, எம்.ஜி.ஆர். நகரில் பொதுப்பணித் துறைக்கு சொந்தமான இடம் உள்ளது.

இந்த இடத்தை ஆக்கிரமித்து ஏராளமான வீடுகள் கட்டப்பட்டு உள்ளன. இந்த ஆக்கிரமிப்பு வீடுகளை அகற்ற சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டு உள்ளது. இதுபற்றி ஏற்கனவே ஆக்கிரமிப்பாளர்களுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டது. ஆனால் அவர்கள் வீடுகளை காலி செய்யாமல் இருந்தனர்.

இந்த நிலையில் இன்று காலை ஆக்கிரமிப்பு வீடுகளை அகற்ற அதிகாரிகள் ஜே.சி.பி.எந்திரத்துடன் வந்தனர். பாதுகாப்புக்காக ஏராளமான போலீசாரும் அங்கு குவிக்கப்பட்டு இருந்தனர்.

அதிகாரிகள் வருவதை கண்டதும் ஆக்கிரமிப்பாளர்கள் அவர்களை தடுத்து நிறுத்தி கடும் வாக்குவாதம் செய்தனர். வீடுகளை அகற்ற எதிர்ப்பு தெரிவித்து சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் பெண்கள் உள்பட 8 பேர் தங்களது உடலில் மண்எண்ணை மற்றும் டீசலை ஊற்றி தீக்குளிக்க முயன்றனர். அவர்களை போலீசார் தடுத்து தண்ணீரை ஊற்றி மீட்டனர்.

இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. போராட்டத்தின் போது பெண் ஒருவர் மயங்கி விழுந்தார். அவரை மீட்டு ஆம்புலன்சு மூலம் அருகில் உள்ள ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

அப்பகுதி பொதுமக்கள் ஆக்கிரமிப்புகளை அகற்ற எதிர்ப்பு தெரிவித்தும், போதிய அவகாசம் அளித்திட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். ஆனால் இதனை அதிகாரிகள் ஏற்கவில்லை. பொதுமக்களிடம் கோட்டாட்சியர் இப்ராகிம், உதவி பொறியாளர் தயாளன் மற்றும் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

இதைத்தொடர்ந்து ஆக்கிரமித்து கட்டப்பட்டு இருந்த வீடுகளை ஜே.சி.பி.எந்திரத்தால் உடைத்து அகற்றும் பணி தொடங்கியது. இதனால் அப்பகுதி பரபரப்பாக காணப்படுகிறது. ஏராளமான போலீசார் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டு உள்ளனர்.

# பழவேற்காடு கடற்கரையில் ரூ.1 கோடி மீன் வலைகள் எரிந்து நாசம்



பொன்னேரி, ஜூலை 26

பழவேற்காட்டில் அதனைசுற்றி உள்ளகிராம மக்கள் மீன்பிடி தொழில் செய்து வருகிறார்கள். அவர்கள் தங்களது மீன்பிடி வலைகளை கடற்கரையில் வைத்து செல்வது வழக்கம்.

அரங்ககுப்பம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் படகில் சென்று மீன்பிடித்து விட்டு கரைக்கு திரும்பிய போது மீன்பிடி வலைகளை தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வைத்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று நள்ளிரவில் அங்கிருந்த மீன்பிடி வலைகள் திடீரென தீப்பிடித்து எரிந்தது. மீனவர்கள்விரைந்து வந்து தீயை அணைத்தனர். எனினும் வலைகள்முழுவதும் எரிந்து நாசமானது. தகவல் அறிந்ததும் திருப்பாலைவனம் போலீசார் விரைந்து வந்து விசாரணை நடத்தினர்.

வலைகள் எப்படி தீப்பிடித்தது என்பது மர்மமாக உள்ளது. மர்ம நபர்கள் யாரேனும் வலைகளுக்கு தீவைத்தனரா? என்ற கோணத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். எரிந்து நாசமான வலைகளின் சேதமதிப்பு ரூ.1 கோடி இருக்கும் என்று மீனவர்கள் தெரிவித்து உள்ளனர்.

இது குறித்து மீனவர்கள் கூறும்போது, பழவேற்காடு பகுதியில் தொடர்ந்து 4வது முறையாக வலைகள் எரிந்துள்ளன. பழவேற்காடு திருமலை நகர், கோட்டை குப்பம் பகுதியில் கடந்த மாதத்தில் மீன்பிடி வலைகள் எரிந்ததாகவும் இது குறித்து மீன்வளத்துறை காவல்துறையினர் நடவடிக்கை எடுக்க வில்லை எனவும் பழவேற்காடு பகுதியில் மர்ம நபர்கள் தொடர்ந்து இரவு நேரங்களில் மீன்பிடி வலைகளை தீயிட்டு கொளுத்தி வருகின்றனர். அவர்கள்மீதுநடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை தேவை வெளியுறவு அமைச்சருக்கு மு.க.ஸ்டாலின் கடிதம்






சென்னை, ஜூலை 26

தமிழக மீனவர்கள் 9 பேர் எல்லைதாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மீனவர்களையும், மீன்பிடி படகுகளையும் விடுவித்திடக்கோரி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதி உள்ளார்.

அக்கடிதத்தில், ராமேஸ்வரத்தை சேர்ந்த 9 மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், மீனவர்களும், அவர்களது மீன்பிடிப் படகுகளும் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப் பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூலை 22 வரை மட்டும் 250 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளில், ஒரு ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மிக அதிகபட்ச எண்ணிக்கை இது எனகவலையோடு சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை சிறையில் உள்ள 87 மீனவர்கள், 175 படகுகளை விரைவாக விடுவித்திடத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# மக்களுடன் முதல்வர் உயரமான படிக்கட்டுகளில் ஏற முடியாமல் மனு கொடுக்காமல் திரும்பி சென்ற மாற்றுத்திறனாளிகள்





மத்தூர், ஜூலை 26

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சிவம்பட்டி கிராமத்தில் தனியார் மண்டபத்தில் மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சி நடைபெற்றது.

சிவம்பட்டி ஊராட்சி, கண்ணன்டஅள்ளி ஊராட்சி, நாகம்பட்டி ஊராட்சிமற்றும்பொம்மேபள்ளி ஊராட்சி ஆகிய 4 ஊராட்சிகளுக்கு உட்பட்ட பொது மக்கள் தங்களது குறைகளை மனுக்களாக அளித்தனர். தனியார் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாற்றுத்திறனாளிகள் பலர் வந்திருந்தனர்.

சுமார் 10 அடி உயரம் கொண்ட கட்டிடத்தில் படிக்கட்டில் ஏற முடியாமல் சில மாற்றுத்திறனாளிகள் சிரமப்பட்டு மேலே ஏறிச் சென்று மனு கொடுத்தனர்.

மேலும் சில மாற்றுத்திறனாளிகள் படிக்கட்டுகள் ஏற முடியாமல் திணறியதால், அவர்கள் மனுக்களை அளிக்காமல் திரும்பி சென்றனர்.

மேலும் முதியவர்களும் பலர் படிகட்டுகள் ஏற முடியாமல் தாங்கள் கொண்டு வந்த மனுவை அளிக்காமல் திரும்பி சென்றனர். பெயரளவுக்கு மட்டுமே இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்ததாக மனுக்களை அளிக்க வந்த பொது மக்கள் வருத்தத்துடன் தெரிவித்தனர்.

இதுகுறித்து மத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கேட்டபோது, இதெல்லாம் கிராம வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கேட்டுக் கொள்ளுங்கள்எனமெத்தனப்போக்கில் பதில் அளித்தார்.

# தமிழகத்துக்கு சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுபடி காவிரி நீர் கிடைக்க வேண்டும்: அதிகாரிகள் வலியுறுத்தல்



சென்னை, ஜூலை 26

காவிரிநீர்பிரச்சனையில் தமிழகத்துக்கு உரிய தண்ணீரை தர முடியாது என்று கர்நாடக அரசு பிடிவாதமாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் காவிரி ஒழுங்காற்று குழு கடந்த 11ந் தேதி கூடிய போது தமிழகத்துக்கு 12ந் தேதி முதல் 31ந் தேதி வரையில் 20 நாட்களுக்கு தினமும் 1 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகா வழங்க வேண்டும் என்றுகாவிரிமேலாண்மை ஆணையத்துக்கு ஒழுங்காற்று குழு பரிந்துரை செய்திருந்தது.

ஆனால் 20 நாட்களுக்கு 1 டி.எம்.சி. தண்ணீர் வழங்க முடியாது என்று சொன்ன கர்நாடக முதல் மந்திரி சித்தராமையா தமிழகத்துக்கு வினாடிக்கு 8 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடுவோம் என்று கூறி இருந்தார்.

இப்படிப்பட்ட நிலையில் கர்நாடக மாநிலத்தில் பருவ மழை பெய்து வருவதால், காவிரிநீர்ப்பிடிப்பு பகுதிகளான மைசூர், குடகு, ஹாசன் உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், கர்நாடகாவில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் அங்கிருந்து உபரி நீர் காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் டெல்லியில் இன்று மதியம் காவிரி மேலாண்மை ஆணையத்தின் 32வது கூட்டம் இன்று மதியம் கூடியது. இந்த கூட்டத்திற்கு காவிரி மேலாண்மை ஆணைய தலைவர் ஹல்தார்தலைமை தாங்கினார்.

இந்த கூட்டத்தில் தமிழக நீர்வளத்துறை செயலாளர் மணிவாசன், காவிரி தொழில்நுட்ப குழுத் தலைவர் சுப்பிரமணியன் கலந்து கொண்டு கர்நாடகம் ஜூன் மாதம் தர வேண்டிய தண்ணீர் ஜூலை மாதம் கிடைக்க வேண்டிய நீரின் அளவு பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்கள்.

கர்நாடக பகுதிகளில் மழை பெய்வதால் இப்போது தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இல்லையென்றால் போதிய தண்ணீர் தமிழகத்துக்கு கிடைக்காது. எனவே சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுபடி தமிழகத்துக்கு தண்ணீர் கிடைக்க வேண்டும் என்றும் ஆணையத்தில் வலியுறுத்தினார்கள்.

இந்த கூட்டத்தில் கர்நாடகம், கேரளா, புதுச்சேரி, மாநில நீர்வளத்துறை அதிகாரிகளும் கலந்து கொண்டு தங்கள் மாநில நிலவரங்களை எடுத்துக் கூறினார்கள்.

# 5 வந்தே பாரத் ரெயில்கள் தயாராக உள்ளன இயக்கப்படும் வழித்தடம் விரைவில் தெரியும்



சென்னை, ஜூலை 26

அதி நவீன சொகுசு மற்றும் விரைவு எக்ஸ்பிரஸ் ரெயிலான வந்தே பாரத் சென்னை பெரம்பூர் ஐ.சி.எப். தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு பல்வேறு மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது. தமிழகத்திலும் 3 வழித்தடங்களில் வந்தே பாரத் ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

2018 முதல் வந்தே பாரத் ரெயில் பெட்டிகளை தயாரித்து வரும் ஐ.சி.எப். இதுவரையில் 70 ரெயில்களை தயாரித்து உள்ளது. 500க்கும் மேற்பட்ட வடிவமைப்புகளில் சுமார் 75 ஆயிரம் பெட்டிகளை தயாரித்துள்ளது.

இந்த நிதியாண்டில் 1,536 எல்.எச்.பி. பெட்டிகள் மற்றும் 650க்கும் மேற்பட்ட வந்தே பாரத் ரெயில் பெட்டிகள் உட்பட 3,515 ரெயில் பெட்டிகளை தயாரிக்க ஐ.சி.எப். திட்டமிட்டுள்ளது.

தற்போது 5 வந்தே பாரத் ரெயில்கள் இயக்குவதற்கு பெட்டிகள் தயாராக உள்ளன. அவற்றை விரைவில் இயக்கவும் எந்த நகரங்களுக்கு அவை செல்கிறது என்பதும் ரெயில்வே வாரியம் தீர்மானிக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

16 பெட்டிகளை கொண்ட இந்த ஆரஞ்சு நிற ரெயில்களின் இறுதி ஆய்வுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இது பற்றி ஐ.சி.எப். அதிகாரி ஒருவர் கூறுகையில், 'இந்த வந்தே பாரத் ரெயில்கள் இயக்கப்படும் வழித்தடங்களை ரெயில்வே வாரியம் முடிவு செய்யும்.

தற்போது வந்தே பாரத் ரெயில்களில் 8 அல்லது 16 பெட்டிகள் உள்ளன. எதிர்காலத்தில் 20 மற்றும் 24 பெட்டிகளுடன் இயக்கப்படும். வந்தே பாரத் மெட்ரோவின் சோதனை ஓட்டமும் நடத்தப்பட்டுள்ளது என்றார்.

# பெண்ணுக்காக நடந்த மோதலில் டிராவல்ஸ் நிறுவன ஊழியர் கொலை

அலங்காநல்லூர், ஜூலை 26

மதுரை தல்லாகுளம் ஆசாரி தெரு பகுதியைச் சேர்ந்தவர் ஜாகீர் உசேன் மகன் காதர் இஸ்மாயில் (வயது 29). இவர்தனியார் டிராவல்ஸ் நிறுவனத்தில் ஊழியராக வேலை பார்த்து வந்தார். அதே நிறுவனத்தில் முருகன், ராஜா உசேன் ஆகியோரும் வேலை பார்த்து வருகிறார்கள்.

இந்தநிலையில் காதர் இஸ்மாயிலின் நண்பரான சரவணக்குமார் என்பவர் ஜெய்ஹிந்த்புரம் பகுதியை சேர்ந்த சசிகலா (24) என்பவரை காதலித்து வருகிறார். நேற்று சசிகலாவுக்கு பிறந்த நாளாகும். இதனை கொண்டாடுவதற்காக அவரது தோழிகளான சிக்கந்தர்சாவடியை சேர்ந்த வினோதினி, அண்ணா நகரை சேர்ந்த பபிதா ஆகியோர் ஏற்பாடுகளை செய்தனர்.

இதையடுத்து தோழிகள் 3 பேரும் தனியார் டிராவல்ஸ் நிறுவனத்தில் காரை வாடகைக்கு எடுத்துக் கொண்டு மதுரையில் இருந்து புறப்பட்டனர். அந்த காரில் அவர்களுடன் பரவை பொற்கூடல் நகரை சேர்ந்த முருகன் (32), கே.புதூர் அல் அமீன் நகரை சேர்ந்த ராஜா உசேன் (24) ஆகியோரும் சென்றிருந்தனர். தனது காதலி பிறந்த நாளுக்கு முருகன், ராஜா உசேன் சென்றதை அறிந்த சரவணக்குமார் கடும் ஆத்திரம் அடைந்தார்.

இதற்கிடையே டிராவல்ஸ் நிறுவன ஊழியர்களான முருகன், ராஜா உசேன் ஆகிய இருவரும் சரவணகுமாரின் காதலியான சசிகலாவுடன் மதுரைநத்தம் சாலையில் காஞ்சாரம் பேட்டை பகுதியில் உள்ள ஒரு சாலையோர உணவகத்திற்கு சென்றிருந்தனர்.

இதையடுத்து சரவணக்குமார் தனது நண்பர் காதர் இஸ்மாயிலை அழைத்துக் கொண்டு காதலி சென்றிருந்த ஓட்டலுக்கு சென்றுள்ளார்.

முன்னதாக டிராவல்ஸ் நிறுவன ஊழியர்களான முருகன், ராஜா உசேன் இருவரும் அளவுக்கு அதிகமான மது போதையில் இருந்ததோடு, சசிகலா மற்றும் அவரது தோழிகளுடன் தகராறில் ஈடுபட்டுள்ளனர். அப்போது அங்கு வந்த சரவணக்குமார், அவர்களை தட்டிக் கேட்டதோடு, என்னுடைய காதலியை நீ ஏன் காரில் அழைத்து வந்தாய் என்று கேட்டு வாக்குவாதம் செய்தார். அவருக்கு ஆதரவாக காதர் இஸ்மாயிலும் முருகனை தட்டிக் கேட்டார்.

இந்தநிலையில் உணவகத்தை பூட்ட வேண்டும் என்று கூறிய அதன் நிர்வாகத்தினர் தகராறில் ஈடுபட்டவர்களை வெளியே செல்லுமாறு கூறினர். அதே சமயம் பெண்ணுக்காக உருவான தகராறு முற்றி கைகலப்பாக மாறியது.

அப்போது ஒருவரையொருவர் மாறி மாறி தாக்கிக்கொண்டனர். இதில் ஆத்திரத்தின் உச்சிக்கு சென்ற முருகன் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து காதர் இஸ்மாயிலை சரமாரியாக குத்தினார்.

தடுக்க சென்ற சரவணக்குமாருக்கும் கத்திக்குத்து விழுந்தது. இதில் அவர்கள் இருவரும் ரத்த வெள்ளத்தில் சரிந்தனர். இதைப் பார்த்த அருகில் இருந்தவர்கள் உடனடியாக 108 ஆம்புலன்சுக்கு தகவல் தெரிவித்தனர். பின்னர் அவர்களை மீட்டு மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

ஆனால் வழியிலேயே காதர் இஸ்மாயில் பரிதாபமாக இறந்தார். சரவணக்குமார் உயிருக்கு ஆபத்தான நிலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த சம்பவம் குறித்து சத்திரப்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து முருகனை கைது செய்து தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

பெண்ணுக்காக நடந்த மோதலில் டிராவல்ஸ் நிறுவன ஊழியர் கொலை செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித்தொகை: மாணவர்களை அலைக்கழிக்கக்கூடாது அன்புமணி வலியுறுத்தல்



சென்னை, ஜூலை 26

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

முனைவர் ஆராய்ச்சிப் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.25,000 வீதம் உதவித் தொகை வழங்குவதற்கான முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித் தொகை திட்டத்தின் படி தகுதியான மாணவர்கள் போட்டித் தேர்வு மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்ட நிலையில், அதன் பின் 4 மாதங்களாகியும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான தேர்ச்சிக் கடிதம் இன்று வரை வழங்கப்படவில்லை.

அதனால் தேர்ந்தெடுக்கப்பட்டும் ஆராய்ச்சிப் படிப்பை தொடங்க முடியாமலும், உதவித் தொகை பெற முடியாமலும் மாணவர்கள் தவித்து வருகின்றனர்.

மாணவர்களின் ஆராய்ச்சி சார்ந்த இந்த விஷயத்தில் தமிழக அரசு இனியும் அலட்சியம் காட்டி, மாணவர்களை அலைக்கழிக்கக் கூடாது. முதலமைச்சரின் ஆராய்ச்சி உதவித் தொகை பெறுவதற்கு தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவருக்கும் அடுத்த ஓரிரு நாட்களுக்குள் தேர்ச்சிக் கடிதங்களை வழங்கி, அவர்கள் குறித்த காலத்தில் முனைவர் பட்டப்படிப்பில் சேருவதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# காங்கேயம் அருகே கார்லாரி மோதல்: இளம்பெண் உள்பட 2 பேர் பலி




வெள்ளகோவில், ஜூலை 26

திருப்பூர் மாவட்டம் காங்கேயம் அடுத்த ஆலம்பாடி ஊராட்சியில் ஆவின் பால் கூட்டுறவு சங்க செயலாளராக பணியாற்றி வருபவர் பேபி (வயது 45). இவரது மகள் ரஞ்சனி பிரியா (25). கல்லூரி படிப்பு முடித்து விட்டு அரசு வேலை தேர்வுக்கு பயிற்சி பெற்று வந்தார்.

இந்நிலையில் பேபி, மகள் ரஞ்சனி பிரியா மற்றும் உறவினர்சிவக்குமார், பால்பண்ணையில் டிரைவராக பணிபுரியும் பெரியசாமி ஆகியோர் திருச்செந்தூர் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தனர். பின்னர் நேற்றிரவு திருச்செந்தூரில் இருந்து காங்கயத்திற்கு காரில் புறப்பட்டனர். காரை பெரியசாமி ஓட்டினார். காங்கயம் கருக்கம்பாளையம் அருகே வரும் போது கட்டுப்பாட்டை இழந்த கார் எதிரே வந்த லாரி மீது நேருக்கு நேர் பயங்கரமாக மோதியது. இதில் கார் தலைகுப்புற கவிழ்ந்து சுக்குநூறாக நொறுங்கியது.

காரில் இருந்த 4 பேரும் பலத்த காயமடைந்து உயிருக்கு போராடினர். இது குறித்த தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற காங்கேயம் தீயணைப்பு நிலைய வீரர்கள் இடிபாடுகளில் சிக்கி உயிருக்கு போராடி கொண்டிருந்த 4 பேரையும் மீட்டு தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தனர்.

அங்கு டாக்டர்கள் பரிசோதித்த போது ரஞ்சனி பிரியா மற்றும் டிரைவர் பெரியசாமி ஆகியோர் இறந்துவிட்டதாக தெரிவித்தனர். மேலும் பேபி, சிவக்குமார் ஆகிய இருவருக்கும் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பின் மேல் சிகிச்சைக்காக கோவை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்தவிபத்து குறித்து ஊதியூர் போலீசார் விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

# ஆம்னி பஸ் டிரைவரின் கையை கட்டிப்போட்டு சரமாரி தாக்குதல்: வைரலாகும் வீடியோவால் பரபரப்பு



மதுரை, ஜூலை 26

மதுரை மாட்டுத்தாவணி ஆம்னி பஸ் நிலையத்தில் இருந்து நாள்தோறும் பல்வேறு மாவட்டங்களுக்கு பஸ்கள் இயக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மதுரையில் உள்ள ஆம்னி பஸ் நிறுவனத்தில் பணிபுரியும் டிரைவரை ஜன்னலில் கையை கட்டி விட்டு அவரை மர்மநபர்கள் சரமாரியாக தாக்குகின்றனர். இதுதொடர்பானவீடியோ தற்போது இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. டிரைவர் எதற்காக தாக்கப்பட்டார்? கையை கட்டி யார் தாக்கினார்கள்? என தெரியவில்லை. இணையத்தில் பரவி வரும் வீடியோ தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட நபர்கள் மீது வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. இந்த நிலையில் இந்த வீடியோ தொடர்பாக மாட்டுத்தாவணி போலீசார் விசாரணையை தொடங்கி உள்ளனர்.

# சென்னை வேப்பேரியில் பஸ்சின் மேற்கூரையில் ஏறி ஆட்டம் போட்ட பள்ளி மாணவர்கள்



திருவொற்றியூர், ஜூலை 26

சென்னையில் ரூட்டு தல தகராறில் கல்லூரி மாணவர்களிடைய பஸ், ரெயில்களில் அடிக்கடி மோதல் ஏற்பட்டு வருகிறது. இதேபோல் காலை மற்றும் மாலை நேரங்களில் கல்லூரி, பள்ளி மாணவர்களும் ஆபத்தான நிலையில் பஸ்களில் தொங்கிய படி சாகச பயணம் செய்து வருகிறார்கள்.

இதனை கண்டிக்கும் டிரைவர், கண்டக்டரிடம் மோதலில் ஈடுபட்டு தாக்குல் சம்பவமும் அடிக்கடி நடந்து வருகிறது.

இந்த நிலையில் வேப்பேரியில் உள்ள பள்ளியில் படிக்கும் மாணவர்கள் சிலர் கோயம்பேட்டில் இருந்து திருவொற்றியூர் நோக்கி சென்ற மாநகர பஸ்சில் (தடம் எண் 159ஏ) கும்பலாக ஏறினர். அவர்கள் பஸ்சுக்குள் செல்லாமல் படிக்கட்டிலும், ஜன்னல் கம்பியிலும் தொங்கியபடி பயணம் செய்தனர்.

சில மாணவர்கள்பசின் மேற்கூரையின் மீது ஏறி நின்று ஆட்டம் போட்டனர். இதனால் அதிர்ச்சி அடைந்த டிரைவர் பஸ்சை நிறுத்தினார். ஆனால் மாணவர்கள் பஸ்சில் இருந்து இறங்க மறுத்து தொடர்ந்து பாட்டு பாடியும், கூச்சலிட்டும் ரகளையில் ஈடுபட்டனர்.

டிரைவரும், கண்டக்டரும் மாணவர்களை எச்சரித்தும் கேட்டகாமல் தொடர்ந்து அட்டகாசம் செய்தனர். பஸ் நடுரோட்டில் நின்றதால் அப்பகுதியில் கடும்போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. நீண்ட நேரத்திற்கு பின்னர் மாணவர்கள் பஸ்சில் இருந்து இறங்கியதும் மீண்டும் பஸ் புறப்பட்டு சென்றது.

இந்த பஸ் புரசைவாக்கத்தில் பஸ் சென்று கொண்டிருந்த போது பள்ளி மாணவர்கள் மேற்கூரை மீது ஏறி அட்டகாசம் செய்து உள்ளனர். இதனை அவ்வழியே சென்ற ஒருவர் செல்போனில் வீடியோ எடுத்து சமூக வலைதளத்தில் பதிவிட்டு உள்ளார். தற்போது இந்த வீடியோ வைரலாக பரவிவருகிறது.

புரசைவாக்கம் பகுதியில் ஏராளமான தனியார் மற்றும் அரசு பள்ளிகள் உள்ளன. இந்த பகுதியில் உள்ள அனைத்து பஸ்நிலையங்களிலும் காலை மற்றும் மாலை நேரங்களிலும் பள்ளி மாணவர்களின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பயணிகள் குற்றம் சாட்டி வருகிறார்கள்.

எனவே இந்த இருவேளைகளிலும் பள்ளி அருகே உள்ள பஸ்நிறுத்தங்களில் போலீசார் கண்காணிபில் ஈடுபட வேண்டும் என்று கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# அனுமதியின்றி சவுடு மண் எடுத்த ஊராட்சி தலைவரின் கணவர் உள்பட 3 பேர் கைது



சீர்காழி, ஜூலை 26

மயிலாடுதுறை மாவட்டம், வைத்தீஸ்வரன் கோவில் அருகே நத்தம் பகுதியில் அனுமதியின்றி சவுடு மண் எடுப்பதாக மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு மீனாவுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனையடுத்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு மீனா மற்றும் போலீசார் நத்தம் பகுதிக்கு நள்ளிரவில் ஆய்வுக்கு சென்றனர்.

அப்போது அங்கு அனுமதியின்றி சவுடு மண் எடுத்து கொண்டிருந்த நபர்களை சுற்றி வளைத்தனர். பின்னர் அவர்களிடம் விசாரித்ததில், அந்த இடம் நத்தம் பகுதியை சேர்ந்த ஊராட்சி தலைவரின் கணவர் செந்தில்குமார் என்பவருக்குரியது என்பதும், அதில் செந்தில்குமார் அரசு அனுமதி இன்றி மண் எடுத்துள்ளதும் தெரிய வந்தது.

இதனை அடுத்து போலீஸ் சூப்பிரண்டு மீனா உத்தரவின்படி, செந்தில் குமார் மற்றும் ஆலவெளி பகுதியை சேர்ந்த டிராக்டர் டிரைவர் கார்த்திக், கதிராமங்கலம் பகுதியை சேர்ந்த நாகராஜன் ஆகிய 3 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

அவர்களிடம் இருந்து 3 டிராக்டர்கள், ஒரு ஹிட்டாச்சி எந்திரம் 2 மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். இதுகுறித்து வைத்தீஸ்வரன்கோவில் போலீசார் வழக்குபதிவு செய்து இதில் தொடர்புடைய மேலும் 3 பேரை தேடி வருகின்றனர்.

# தமிழகத்தில் ரேபிஸ் நோய் பாதிப்பால் 22 பேர் உயிரிழப்பு: சுகாதாரத்துறை தகவல்



சென்னை, ஜூலை 26

அனைத்து மாவட்ட சுகாதாரத்துறை அலுவலர்களுக்கு, பொதுசுகாதாரத் துறை இயக்குனர் செல்வவிநாயகம் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

"தமிழகத்தில் நாய், பாம்பு உள்ளிட்டவைகளால் பொதுமக்கள் பாதிக்கப்படும் சம்பவம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. அந்தவகையில், கடந்த 2023ம் ஆண்டு 4 லட்சத்து 41 ஆயிரத்து 804 பேர் நாய் கடியால் பாதிக்கப்பட்டு அதில் ரேபிஸ் நோய் ஏற்பட்டு 18 பேர் உயிரிழந்திருந்தனர்.

இதேபோல, இந்த ஆண்டு ஜூன் மாதம் வரையில் 2 லட்சத்து 42 ஆயிரத்து 782 பேர் நாய் கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில், 22 பேர் ரேபிஸ் நோய் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். மேலும், 2023ம் ஆண்டு 19 ஆயிரத்து 795 பேர் பாம்பு கடியால் பாதிக்கப்பட்டனர். இந்த ஆண்டு தற்போது வரை 7 ஆயிரத்து 310 பேர் பாம்பு கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், தமிழகத்தில் உள்ள அனைத்து சுகாதாரநிலையங்களிலும் விலங்குகளால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை கட்டுப்படுத்துவதற்கான தீவிர நடவடிக்கைகளை சுகாதாரத்துறை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும். அதன்படி, அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 24 மணி நேரமும் பாம்பு மற்றும் நாய் கடிக்கு வழங்கக்கூடிய மருந்துகளை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும்.

குறைந்தபட்சம் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 10 ஏ.எஸ்.வி. மருந்து குப்பிகளை கையிருப்பு வைத்திருக்க வேண்டும். பாம்பு கடியால் அனுமதிக்கப்படும் அனைத்து நோயாளிகளுக்கும் ஏ.எஸ்.வி. மருந்தினை ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழங்க வேண்டும்.

அந்தவகையில், ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் குறைந்தபட்சம் 20 ஏ.ஆர்.வி. மருந்து குப்பிகளை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும். நாய் கடித்தால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் அனைவருக்கும் ஏ.ஆர்.வி. மருந்தினை வழங்க வேண்டும். இதனைஅனைத்துஆரம்ப சுகாதார நிலையத்திலும் முறையாக பின்பற்ற வேண்டும்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருவண்ணாமலை கோவிலில் அம்மனுக்கு ரேஷன் சேலை அணிவிப்பு புகைப்படம் வைரல்



திருவண்ணாமலை, ஜூலை 26

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலுக்கு தினமும் ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்தனர். இந்த நிலையில் 2 நாட்களுக்கு முன்பு பவுர்ணமியின் போது கோவிலில் உண்ணாமலை அம்மன் சன்னதியின் முன்பு உள்ள அம்மன் சிலைக்கு ரேஷன் கடையில் வழங்கப்படும் விலையில்லா சேலை அணிவிக்கப்பட்டு இருந்தது. இதுகுறித்த புகைப்படம் சமூக வலைதளத்தில் வைரலானது. இதுகுறித்து அருணாசலேஸ்வரர் கோவில் இணை ஆணையர் ஜோதியிடம் கேட்டபோது, திருவூடல் நிகழ்ச்சியில் மண்டக படியின்போது பக்தர்கள் சிலர் அம்மனுக்கு சேலையை சாத்தினர். இதில் பக்தர் ஒருவர்ரேஷன்சேலையை வழங்கி உள்ளார். பவுர்ணமியின்போது அம்மன் சிலைக்கு அந்த ரேஷன் கடை சேலை அணிவிக்கப்பட்டு உள்ளது. இது பற்றி அறிந்ததும் உடனடியாக சேலை மாற்றப்பட்டது' என்றார்.

# தோற்கடித்தவர்களைப் பழிவாங்குவதில் குறியாக இருக்க வேண்டாம்: மோடிக்கு முதல்அமைச்சர் அறிவுறுத்தல்



சென்னை, ஜூலை 26

தோற்கடித்தவர்களைப் பழிவாங்குவதில் குறியாக இருக்க வேண்டாம் என பிரதமர் மோடிக்கு முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

மத்திய நிதிநிலை அறிக்கையில் ஒருசில மாநிலங்கள் நீங்கலாகப் பல்வேறு மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதைக் கண்டிக்கும் வகையில் 'இந்தியா' கூட்டணி எம்.பி.க்கள் போராட்டம் நடத்தியுள்ளார்கள். பிரதமர் மோடி அவர்களே, "தேர்தல் முடிந்துவிட்டது, இனி நாட்டைப் பற்றியே சிந்திக்க வேண்டும்" என்று சொன்னீர்கள். ஆனால், நேற்றைய பட்ஜெட் உங்கள் ஆட்சியைக் காப்பாற்றுமே தவிர, இந்திய நாட்டைக் காப்பாற்றாது. அரசைப் பொதுவாக நடத்துங்கள். இன்னமும் தோற்கடித்தவர்களைப் பழிவாங்குவதில் குறியாக இருக்க வேண்டாம். அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப அரசை நடத்தினால், தனிமைப்பட்டுப் போவீர்கள் என அறிவுறுத்தக் கடமைப்பட்டுள்ளேன். என தெரிவித்துள்ளார்.

# கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய வழக்கில் 15 பேரின் காவல் நீட்டிப்பு

கள்ளக்குறிச்சி, ஜூலை 26

கள்ளக்குறிச்சி கருணாபுரம், மாதவச்சேரி, சேஷசமுத்திரம் ஆகிய பகுதிகளில் கடந்த மாதம் 19ந்தேதி கள்ளச்சாராயம் குடித்ததில் 229 பேர்பாதிக்கப்பட்டனர்.

இதில் 65 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த நிலையில் 161 பேர் குணமடைந்து வீடுதிரும்பினர். ஒருவர் மட்டும் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த வழக்கு தொடர்பாக விழுப்புரம் சி.பி.சி.ஐ.டி. போலீசார் வழக்குப்பதிந்து இதுவரை 24 பேரை கைது செய்து கடலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

இந்தநிலையில்கைதான சென்னையைசேர்ந்த கவுதம் சந்த், பன்ஷிலால், சிவக்குமார், கருணாபுரத்தைசேர்ந்த கண்ணுக்குட்டி என்கிற கோவிந்தராஜ், இவருடைய மனைவி விஜயா, சின்னத்துரை, ஜோசப், கதிரவன், கண்ணன், மாதேஷ், சக்திவேல், சடையன், செந்தில், ஏழுமலை, ரவி ஆகியோரின் நீதிமன்ற காவல், நேற்றுடன் முடிவடைய இருந்தது.

இதையடுத்து இவர்கள் 15 பேரையும் காணொலி காட்சி மூலம் கள்ளக்குறிச்சி மாவட்ட தலைமை குற்றவியல் நடுவா் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீராம் முன்னிலையில் சி.பி.சி.ஐ.டி. போலீசார் ஆஜர்படுத்தினர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, கவுதம்சந்த் உள்பட 15 பேருக்கும் அடுத்த மாதம் (ஆகஸ்டு) 5ந்தேதி வரை நீதிமன்ற காவலை நீட்டித்து உத்தரவிட்டார்.

# ஓடும் அரசு பஸ்சின் மேற்கூரை பெயர்ந்து தொங்கியதால் பரபரப்பு



பழனி, ஜூலை 26

பழனி பகுதியில் நேற்று காலை முதலே பலத்த காற்று வீசியது. இந்நிலையில் மதியம் 12 மணிக்கு பழனி மற்றும் சுற்று வட்டார பகுதியில் சூறாவளி காற்று வீசியது. இந்த காற்றுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் பல்வேறு இடங்களில் மரக்கிளைகள் முறிந்து விழுந்தன.

பழனி திருவள்ளுவர் சாலையோரம் நின்ற வேப்பமரம் ஒன்று வேரோடு சாய்ந்து சாலையில் விழுந்தது. அப்போது மரத்துக்கு அடியில் தள்ளுவண்டியில் பழவியாபாரம் செய்த ஆயக்குடியை சேர்ந்த காளியம்மாள் (வயது 47) என்பவர் மீது மரக்கிளை பட்டதில் லேசான காயம் அடைந்தார். மேலும் அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதேபோல் பழனி தட்டான்குளத்தில், கணேசன் என்பவரது வீட்டின் மேற்கூரை (ஆஸ்பெஸ்டாஸ்) காற்றுக்கு அப்படியே பறந்து விழுந்து சேதமடைந்தது.

இதற்கிடையே கீரனூரில் இருந்து பழனி நோக்கி வந்த அரசு டவுன் பஸ் நரிக்கல்பட்டி பகுதியில் வந்தபோது, சூறாவளி காற்றால் பஸ்சின் மேற்கூரை திடீரென பெயர்ந்து தொங்கியது. இதை கண்டதும் பயணிகள் பதற்றத்தில் அலறினர். இதனையடுத்து பஸ் உடனடியாக நிறுத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து மாற்று பஸ்சில் பயணிகள் அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் பழனி பகுதியில் வீசிய சூறாவளி காற்றுக்கு நேற்று மட்டும் சுமார் 15 மின்கம்பங்கள் சாய்ந்து விழுந்தது. இதுகுறித்து தகவல் அறிந்த மின்வாரிய பணியாளர்கள் விரைந்து சென்று அங்கு சீரமைப்பு பணியில் ஈடுபட்டனர்.

# ஆபாச வீடியோவை பார்த்த சிறுமியை மிரட்டி உல்லாசம் வீடியோ எடுத்து மிரட்டி அடுத்தடுத்து பலாத்காரம்

விருதுநகர், ஜூலை 26

விருதுநகர் பகுதியை சேர்ந்த 15 வயது சிறுமி, விடுமுறை தினங்களில் தனது தாயாரின் செல்போனை பயன்படுத்தி வந்துள்ளார். இதை அறிந்த ராஜேஷ் (வயது 22) என்பவர்சிறுமிக்கு ஆபாசபடங்களை அனுப்பியுள்ளார்.

பின்னர் ராஜேஷ், அந்த சிறுமியிடம் செல்போனில் பேசி வந்ததாக கூறப்படுகிறது. இந்தநிலையில் சிறுமி ஆபாசப்படம் பார்த்ததை அவரது குடும்பத்தினரிடம் தெரிவித்து விடுவதாக மிரட்டி, சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது. அதனை வீடியோவாகவும் ராஜேஷ் பதிவு செய்தாராம்.

மேலும் அந்த வீடியோவை காட்டி மிரட்டி ராஜேஷ் மற்றும் அதே பகுதியைச் சேர்ந்த சசிக்குமார் (24) ஆகிய இருவரும் சிறுமியை பாலியல் பாலியல் பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது. இதனை சிறுமி தனது தாயாரிடம் தெரிவித்துள்ளார். இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த சிறுமியின் தாயார், இதுகுறித்துவிருதுநகர்அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். அதன் பேரில், ராஜேஷ் மற்றும் சசிகுமார் ஆகிய இருவரையும் போலீசார் போக்சோ சட்டத்தில் கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# தோழியின் பிறந்தநாள் கொண்டாட்டம்: வாலிபர் படுகொலையில் முடிந்ததால் அதிர்ச்சி



மதுரை, ஜூலை 26

தோழியின் பிறந்த நாள் கொண்டாட்டம் வாலிபர் படுகொலையில் முடிந்தது. நண்பருக்கும் கத்திக்குத்து விழுந்தது. ஓட்டல் முன்பு இரவில் நடந்த இந்த பயங்கர சம்பவம் பற்றி விசாரணை நடந்து வருகிறது.

இதுகுறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது:

மதுரை கோ.புதூர் அல் அமீன் நகரைச் சேர்ந்தவர் ராஜா உசேன் (வயது 43). இவர் டிராவல்ஸ் நிறுவனம் நடத்தி வருகிறார். இவரிடம் மதுரை தல்லாகுளத்தைச் சேர்ந்த காதர் இஸ்மாயில் (29), தல்லாகுளம் ஆசாரி தெருவைச் சேர்ந்த சரவணன் ஆகியோர் வேலை பார்த்து வந்தனர்.

ராஜா உசேனின் நண்பர், பரவையைச் சேர்ந்த ரஞ்சித் என்ற முருகன் (32). இவர் கேட்டரிங் நிறுவனம் நடத்தி வருகிறார்.

இவருடைய தோழிகள், ஜெய்ஹிந்த்புரத்தைச் சேர்ந்த சசிகலா (30), அண்ணாநகரைச் சேர்ந்த பபிதா (29), சிக்கந்தர்சாவடியைச் சேர்ந்த வினோதினி (30). இவர்கள் 3 பேரும் பியூட்டி பார்லர்நடத்தி வருவதால், ரஞ்சித்தின் கேட்டரிங் நிறுவனத்தின் சார்பில் நடக்கும் நிகழ்ச்சிகளில் அவர்களும் இணைந்து பணியாற்றி உள்ளனர். இதனால் அவர்களுக்கிடையே பழக்கம் அதிகமானது. இதற்கிடையே சரவணன், சசிகலாவை காதலித்து வந்ததாகக் கூறப்படுகிறது.

தோழி பபிதாவின் பிறந்த நாளையொட்டி நேற்று முன்தினம் மாலை மதுரை சொக்கிகுளத்தில் உள்ள பேக்கரியில் அனைவரும் பிறந்த நாளை கொண்டாடி உள்ளனர். இதனைதொடர்ந்து, இரவு உணவுக்காக மதுரையில் நத்தம் நான்குவழிச்சாலையில் காஞ்சரம்பேட்டை பகுதியில் உள்ள உணவகத்துக்கு புறப்பட்டனர்.

அப்போது ராஜா உசேன், ரஞ்சித் ஆகியோர் தங்கள் காரில், சசிகலா, வினோதினி, பபிதா ஆகிய 3 பேரையும் ஏற்றிக் கொண்டு சென்றனர். அந்த நேரத்தில், சரவணன் மற்றும் காதர் இஸ்மாயில் ஆகிய இருவரும் சசிகலாவிடம் செல்போனில் தொடர்பு கொண்டு பேசியபோது, காஞ்சரம்பேட்டையில் உள்ள உணவகத்தில் இருப்பதாக கூறியுள்ளார்.

இதனை தொடர்ந்து உணவகத்துக்கு சரவணன், காதர் இஸ்மாயில் ஆகிய இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்றனர். அங்கு ரஞ்சித்தை பார்த்த சரவணன், தனது காதலி சசிகலாவை எப்படி காரில் அழைத்து வரலாம் என்று கூறி தகராறில் ஈடுபட்டுள்ளார். இதற்கு சரவணனுக்கு ஆதரவாக காதர் இஸ்மாயிலும் ரஞ்சித்தை தட்டிக்கேட்டுள்ளார். இதனால் அவர்களுக்கிடையே தகராறு ஏற்பட்டது.

நள்ளிரவு நேரம் என்பதால் உணவகத்தினர், தகராறில் ஈடுபட்டவர்களை வெளியேற்றி உள்ளனர். இதையடுத்து உணவகத்துக்கு வெளியே சென்ற 3 பேரும் அங்கும் தகராறில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் ஆத்திரமடைந்த ரஞ்சித், மறைத்து வைத்திருந்த கத்தியால் காதர் இஸ்மாயில் மற்றும் சரவணனை சரமாரியாக குத்தி உள்ளார். காதர் இஸ்மாயிலின் உடலில் பல இடங்களில் கத்திக்குத்து விழுந்தது. அவர் மயங்கி விழுந்தார்.


இதனை தொடர்ந்து உணவக ஊழியர்கள் 108 ஆம்புலன்ஸ் வாகனத்தை வரவழைத்து காயமடைந்த காதர் இஸ்மாயில், சரவணன் ஆகியோரை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்குகாதர்இஸ்மாயிலை பரிசோதித்த டாக்டர்கள், அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தனர். பலத்த காயமடைந்த சரவணனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மோதல் குறித்த தகவலின்பேரில் அரசு ஆஸ்பத்திரிக்கு சென்ற எம்.சத்திரப்பட்டி போலீசார், காதர் இஸ்மாயிலின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக சரவணன் அளித்த புகாரின்பேரில் கொலை வழக்குப்பதிவு செய்து ரஞ்சித்தை கைது செய்தனர். மேலும் இந்த படுகொலை தொடர்பாக, தோழியின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் பங்கேற்றவர்களிடமும் விசாரணை நடந்து வருவதாக போலீசார் தெரிவித்தனர்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
26.7.2024

## டிமான்டி காலனி2' படத்தின் டிரெய்லர்



அருள்நிதி நடிப்பில் கடந்த 2015ம் ஆண்டு வெளியான படம், 'டிமான்டி காலனி'. இந்த படத்தை அஜய் ஞானமுத்து இயக்கியிருந்தார். ஹாரர் திரில்லர் கதை களத்தில் வெளியான இந்த படம் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. தற்போது கிட்டத்தட்ட எட்டு வருடங்கள் கழித்து 'டிமான்டி காலனி' படத்தின் இரண்டாம் பாகம் உருவாகி இருக்கிறது.

அதைத்தொடர்ந்து மிரட்டலான டிரெய்லரும் வெளியாகி படத்தின் மீதான எதிர்பார்ப்பை எக்கச்சக்கமாக அதிகப்படுத்தியது. இதில், பிரியா பவானி சங்கர், அருண்பாண்டியன், விஜே அர்ச்சனா, மீனாட்சி கோவிந்தராஜன், முத்துக்குமார் உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்நிலையில், இப்படத்தின் புதிய டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது. இது தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. ஆகஸ்ட் 15ம் தேதி படம் வெளியாக உள்ளநிலையில், தற்போது இந்த டிரெய்லர் படம் மீதான எதிர்பார்ப்பை மேலும் அதிகப்படுத்தியுள்ளது.

## 'ஸ்ட்ரீ 2' படத்தின் புதிய பாடல் வெளியீடு



ராஜ்குமார் ராவ், ஷ்ரத்தா கபூர் உள்ளிட்ட பல முன்னணி நடிகர்கள் நடிப்பில் அமர் கவுஷிக் இயக்கத்தில் கடந்த 2018ம் ஆண்டு வெளியானபடம் 'ஸ்ட்ரீ'. ஹாரர்காமெடி கதைக்களத்தில் வெளியான இப்படம் வசூல் ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது.

அதனைத்தொடர்ந்து, தற்போது இப்படத்தில் இரண்டாம் பாகம் உருவாகி வருகிறது. முதல் பாகத்தில் நடித்த நடிகர்களே இரண்டாம் பாகத்திலும் நடிக்கின்றனர். அடுத்த மாதம் 15ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ள இப்படத்தின் டிரெய்லர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது.

இந்நிலையில், இப்படத்தின் புதிய பாடலான 'ஆஜ் கி ராத்' வெளியாகியுள்ளது. இப்பாடலுக்கு நடிகை தமன்னா நடனம் ஆடியுள்ளார். தற்போது இந்த பாடல் இணையத்தில் வைரலாகி வருகிறது.

## விடி12: விஜய் தேவரகொண்டாவின் தோற்றம் கசிவு ரசிகர்களுக்கு வேண்டுகோள் விடுத்த படக்குழு



தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகராக வலம் வருபவர் விஜய் தேவரகொண்டா. இவர் கீதா கோவிந்தம், அர்ஜுன் ரெட்டி உள்ளிட்ட படங்களின் மூலம் ரசிகர்கள் மனதில் இடம் பிடித்தவர். இவர் கடைசியாக 'பேமிலி ஸ்டார்' திரைப்படத்தில் நடித்திருந்தார். பரசுராம் பெட்லா இயக்கியிருந்த இந்த படம் ரசிகர்கள் மத்தியில் கலவையான விமர்சனங்களை பெற்றது.

தற்போது விஜய் தேவரகொண்டா தன்னுடைய 12வது திரைப்படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தை கவுதம் தின்னனுரி இயக்குகிறார். சித்தாரா என்டர்டெயின்மெண்ட் நிறுவனம் படத்தை தயாரிக்க அனிருத் இசை அமைக்கிறார். மேலும் இந்த படத்தில் நடிகை பாக்யஸ்ரீ போர்ஸ் கதாநாயகியாக நடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், விஜய் தேவரகொண்டாவின் புகைப்படம் ஒன்று சமூக வலைதளத்தில் கசிந்து உள்ளது. இது குறித்து தயாரிப்பு நிறுவனம் தனது எக்ஸ் தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த பதிவில், உங்களுக்காக நாங்கள் சிறந்த படத்தை தயாரிக்க கடினமாக உழைக்கிறோம். நாங்கள் 60 சதவீதம் படப்பிடிப்பை முடித்துவிட்டோம். தற்போது இலங்கையில் படப்பிடிப்பில் இருக்கிறோம். கடந்த 6 மாதங்களாக பர்ஸ்ட் லுக் போஸ்டரை அதிகாரபூர்வமாக வெளியிடுவதற்காக மறைத்து வைத்திருக்கிறோம். ஆதலால் எந்தவொரு புகைப்படத்தையும் பகிர வேண்டாம். அதிகாரபூர்வ அறிவிப்புக்காக காத்திருக்கவும், மிக விரைவில் வரும், என்று பதிவிட்டுள்ளனர்.

## 'ராயன்' படத்தின் சிறப்பு காட்சிக்கு தமிழக அரசு அனுமதி




நடிகர் தனுஷ் இயக்கி நடித்துள்ள திரைப்படம் 'ராயன்'. தனுஷ் நடிக்கும் 50வது திரைப்படமான இந்த படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. இந்த படத்தில் எஸ். ஜே.சூர்யா, செல்வராகவன், பிரகாஷ் ராஜ், சந்தீப் கிஷான், துஷாரா விஜயன், அபர்ணா பாலமுரளி, வரலட்சுமி சரத்குமார் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இந்த படத்துக்கு இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார். ஓம் பிரகாஷ் ஒளிப்பதிவு செய்துள்ளார். பிரசன்னா படத்தொகுப்பு செய்கிறார். சமீபத்தில் இந்த படத்தின் பாடல்கள் மற்றும் டிரைலர் வெளியாகி கவனம் பெற்றது. இந்த படத்துக்கு தணிக்கைக்குழு ஏ சான்றிதழ் அளித்துள்ளது. 'ராயன்' திரைப்படம் இன்று திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இந்த நிலையில், 'ராயன்' திரைப்படம் வெளியாகும் 26ந் தேதி சிறப்பு காட்சிக்கு தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. அதன்படி நாளை மறுநாள் காலை 9 மணி முதல் அதிகாலை 2 மணிக்குள் 5 காட்சிகள் என்ற அடிப்படையில் திரையிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## டிரெண்டாகும் மாளவிகா நாயரின் 'கிருஷ்ணம் பிரணயா சகி' பட பாடல்கள்



திரையுலகில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர் மாளவிகா நாயர். பின்னர் மலையாளம், தெலுங்கு மற்றும் தமிழ் போன்ற மொழி படங்களில் நடித்துள்ளார். தமிழில் 'குக்கூ' திரைப்படத்தில் நடித்து புகழ்பெற்றார்.

இவர் தற்போது ஸ்ரீனிவாஸ் ராஜு இயக்கத்தில் 'கிருஷ்ணம் பிரணயா சகி' என்ற படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தின் மூலம் மாளவிகா நாயர் கன்னடத்தில் அறிமுகமாகியுள்ளார். இதில், சரண்யா ஷெட்டி, ஸ்ரீனிவாச மூர்த்தி, ரங்காயண ரகு, சாது கோகிலா, சஷிகுமார், பாவனா, ஸ்ருதி மற்றும் அசோக் ஆகியோர் நடித்துள்ளனர்.

இதற்கிடையில் சின்னம்மா, துவாபரா உள்ளிட்ட மூன்று பாடல்கள் இணையத்தில் வெளியிடப்பட்டன. இந்த பாடல்கள் அனைத்தும் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து டிரெண்டாகி வருகின்றன. இதில், துவாபரா பாடலை "ச ரி க ம ப" போட்டியாளர் ஜஸ்கரன் சிங் பாடியுள்ளார். இப்படம் வருகிற ஆகஸ்ட் 15ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

## பாலிவுட்டில் அதிக சம்பளம் வாங்கும் நடிகைகள் யார் தெரியுமா?



இந்தியத்திரையுலகத்தில் இந்திப் படங்கள்தான் அதிக அளவிலான திரையரங்குகளில் வெளியாகின்றன. இவ்வாறு வெளியாகும் பாலிவுட் படங்களில் நடிக்கும் நடிகைகள் அனைவருமே கோடிக்கணக்கில் சம்பளம் வாங்குகிறார்கள்.

நடிகைகளுக்கும் நடிகர்களுக்கும் வழங்கப்படும் சம்பளத்தில் பெரிய அளவில் வித்தியாசம் உள்ளது. இந்த ஊதிய ஏற்றத்தாழ்வு தற்போதுவரை பேசுபொருளாகவே உள்ளது.

அந்த வகையில், தற்போது கரீனா கபூர், தீபிகா படுகோன், ஆலியா பட், கத்ரீனா கைப், கிருத்தி சனோன், கங்கனா ரனாவத், ஷ்ரத்தா கபூர் உள்ளிட்ட பல முன்னனி பாலிவுட் நடிகைகளில் யார் அதிக சம்பளம் வாங்குகிறார், எவ்வளவு சம்பாதிக்கிறார் என்பதை பார்ப்போம்.

இந்தபட்டியலில் முதல் இடத்தில் இருப்பவர், தீபிகா படுகோன். இவர் ஒரு படத்திற்கு சுமார் ரூ.15 முதல் 20 கோடி வரை சம்பளம் வாங்குகிறார். 2வது இடத்தில் நடிகை ஆலியா பட் உள்ளார். இவர் ஒரு படத்திற்கு ரூ.15 கோடிவரை சம்பளம் பெறுகிறார்.

அடுத்ததாக 3வது இடத்தில் இருப்பவர் கரீனா கபூர். இவர் ஒரு படத்திற்கு சுமார் ரூ.8 முதல் 11 கோடி சம்பளம் வாங்குகிறார். 4வது மற்றும் 5வது இடத்தில் நடிகை கத்ரீனா கைப் மற்றும் ஷ்ரத்தா கபூர் ஆகியோர் உள்ளனர்.

இவர்களுக்கு அடுத்தபடியாக, மற்ற நடிகைகளான கங்கனா ரனாவத், கிருத்தி சனோன், கியாராஅத்வானி, டாப்ஸி ஆகியோர் ரூ.5 முதல் 8 கோடி வரை சம்பளம் வாங்குகின்றனர்.

## ஒலிம்பிக் கமிட்டி உறுப்பினராக மீண்டும் நீடா அம்பானி தேர்வு



33வது ஒலிம்பிக் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நாளை மறுநாள் தொடங்கி ஆகஸ்ட் 11ம் தேதி வரை நடைபெறுகிறது. இந்த தொடரில், 150க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான வீரர் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

இந்த சூழலில் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் 142வது கூட்டம் நடைபெற்றது. இதில் ரிலையன்ஸ் அறக்கட்டளையின் நிறுவனரும், சமூக சேவகருமான நீடா அம்பானி, 100 சதவீத வாக்குகளுடன் இந்தியாவின் உறுப்பினராக போட்டியின்றி மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து நீடா அம்பானி கூறுகையில், "சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் உறுப்பினராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதில் நான் மிகவும் பெருமைப்படுகிறேன். சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியில் உள்ள நண்பர்கள் அனைவரும் என் மீது நம்பிக்கை வைத்ததற்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இந்த மகிழ்ச்சி மற்றும் பெருமையின் தருணத்தை நான் ஒவ்வொரு இந்தியருடனும் பகிர்ந்து கொள்கிறேன், மேலும் இந்தியாவிலும் உலகெங்கிலும் ஒலிம்பிக் இயக்கத்தை வலுப்படுத்துவதற்கான எங்கள் முயற்சிகளை தொடர எதிர்நோக்குகிறேன்" என்று அவர் கூறினார்.

முன்னதாக 2016ம் ஆண்டு ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக் போட்டியின் போது சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தனிநபர் உறுப்பினராக முதன்முதலில் நீடா அம்பானி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## டி.என்.பி.எல்.: நெல்லை அணிக்கு எதிரான ஆட்டத்தில் திருப்பூர் தமிழன்ஸ் வெற்றி



8வது டி.என்.பி.எல். டி20 கிரிக்கெட் போட்டி கடந்த 5ந்தேதி சேலத்தில் தொடங்கியது. அதைத் தொடர்ந்து கோவையில் 2வது கட்ட ஆட்டங்கள் நடைபெற்றது. இந்த போட்டி தொடரில் 8 அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன.

இந்த நிலையில், இன்று நடைபெற்ற ஆட்டத்தில் நெல்லை ராயல் கிங்ஸ், திருப்பூர் தமிழன்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற நெல்லை அணியின் கேப்டன் அருண் கார்த்திக் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி, திருப்பூர் அணி முதலில் செய்தது.

தொடக்கம் முதல் திருப்பூர் அணி சிறப்பாக விளையாடியது. நெல்லை அணியின் பந்துவீச்சை திருப்பூர் பேட்ஸ்மேன்கள் பவுண்டரி, சிக்சருக்கு பறக்கவிட்டனர். இதனால் 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு திருப்பூர் அணி 189 ரன்கள் எடுத்தது. அந்த அணியில் ராதாகிருஷ்ணன் அரைசதம் அடித்தார். மேலும் துஷார் ரெஜா 41 ரன்கள் எடுத்தார். நெல்லை அணியில் அதிகபட்சமாக சிலம்பரசன் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தொடர்ந்து 190 ரன்கள் என்ற இலக்குடன் நெல்லை அணி பேட்டிங்கை தொடங்கியது. அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர் அருண் கார்த்திக் நிலைத்து நின்று ஆடி 51 ரன்கள் குவித்தார். அதே போல் ரித்திக் ஈஸ்வரன் அரைசதம் கடந்து 59 ரன்கள் எடுத்தார். சோனு யாதவ் 40 ரன்கள் சேர்த்தார்.

அதே சமயம் மறுபுறம் வரிசையாக விக்கெட்டுகள் சரிந்த நிலையில், நெல்லை அணி 20 ஓவர்களில் 184 ரன்கள் சேர்த்தது. இதன் மூலம் திருப்பூர் தமிழன்ஸ் அணி 5 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. திருப்பூர் அணியில் அதிகபட்சமாக நடராஜன் 4 விக்கெட்டுகளையும், ராமலிங்கம் ரோகித் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

## இந்தியாவின் முன்னணி வீரர்கள் ஓய்வை இலங்கை அணி சரியாக பயன்படுத்தி கொள்ள வேண்டும் : ஜெயசூர்யா



இலங்கைக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி மூன்று 20 ஓவர் மற்றும் 3 ஒருநாள் போட்டியில் விளையாடுகிறது. இந்தியா இலங்கை அணிகள் இடையிலான முதலாவது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி வருகிற 27ம் தேதி பல்லகெலேவில் நடக்கிறது. இந்தியாவுக்கு எதிரான தொடர் குறித்து இலங்கை அணியின் இடைக்கால பயிற்சியாளர் ஜெயசூர்யா நேற்று அளித்த பேட்டியில் கூறியதாவது:

"எங்கள் அணியில் பெரும்பாலான வீரர்கள் லங்கா பிரிமீயர் லீக்கில் விளையாடியதால் பிசியாக இருந்தார்கள். எனவே அந்த போட்டி முடிந்த பிறகுதான் பயிற்சி முகாமை தொடங்கினோம். வீரர்கள் முடிந்த அளவுக்கு கிரிக்கெட் போட்டிகளில் விளையாட வேண்டும் என்பதே எங்கள் விருப்பமாகும்.

ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் உயர்திறன் இயக்குனர் ஜூபின் பருச்சா எங்கள் வீரர்களுக்கு கடந்த 6 நாட்கள் பயிற்சி அளித்தார். அவரிடம் இருந்து வீரர்கள் நிறைய கற்று இருக்கிறார்கள். சர்வதேச வீரர்கள் புதிய நுட்பம், புதிய அணுகுமுறை, ஷாட் தேர்வில் திறம்பட செயல்படுதல் ஆகியவற்றை கற்றுக்கொள்ள வேண்டியது முக்கியமானதாகும். இந்த போட்டி தொடருக்காக நாங்கள் நன்றாக தயாராகி இருக்கிறோம்.

ரோகித் சர்மா, விராட்கோலி ஆகியோர் உலகின் சிறந்த வீரர்கள். அவர்களின் திறமை, அவர்கள் ஆடிய விதத்தை பார்க்கும் போது அவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பது எங்களுக்கு தெரியும். அவர்கள் இருவரும் சர்வதேச 20 ஓவர் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றது இந்திய அணிக்கு இழப்பாகும். அதனை நாங்கள் சரியாக பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

தற்போதைய இலங்கை அணியின் நிலை என்பது வீரர்கள் செயல்படும் விதத்தை பொறுத்ததாகும். பயிற்சி உள்ளிட்ட பெரும்பாலான வசதிகளை இலங்கை கிரிக்கெட் வாரியம் சிறப்பாக செய்து கொடுத்து இருக்கிறது. இனிமேல் வீரர்கள் கையில் தான் எல்லாமே உள்ளது.

தற்போதைய வீரர்கள் சிறந்த நிலையை எட்டுவதற்கு தேவையான எல்லா பணிகளையும் நாங்கள் செய்து வருகிறோம். அடுத்த இரண்டு வருடத்தில் இந்த வீரர்களிடம் நிறைய முன்னேற்றம் இருக்கும் என்று நம்புகிறேன். தற்போதைய அணி சிறப்பாக செயல்படுவதை பார்க்க மக்கள் காத்திருக்கிறார்கள். விரைவில் அவர்கள் நல்ல ஆட்டத்தை வெளிப்படுத்துவார்கள்."

## ஸ்ரீஜேஷுக்காக ஒலிம்பிக் பதக்கம் வெல்ல விரும்புகிறோம் இந்திய ஆக்கி அணி கேப்டன் ஹர்மன்ப்ரீத்




33வது ஒலிம்பிக் தொடர் வரும் 26ம் தேதி பிரான்ஸ் தலைநகர் பாரீசில் தொடங்க உள்ளது. இதில் 206 நாடுகளை சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்கிறார்கள். ஒலிம்பிக் தொடரில் இந்திய ஆக்கி அணி ஹர்மன்ப்ரீத் சிங் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆக்கி அணியில் இடம் பெற்றுள்ள கோல்கீப்பர் ஸ்ரீஜேஷ் பாரீஸ் ஒலிம்பிக் தொடருடன் சர்வதேச ஆக்கி போட்டியில் இருந்து ஓய்வு பெற உள்ளார். இந்நிலையில் பாரீஸ் ஒலிம்பிக் தொடரில் ஸ்ரீஜேஷுக்காக பதக்கம் வெல்ல விரும்புகிறோம் என இந்திய ஆக்கி அணியின் கேப்டன் ஹர்மன்ப்ரீத் சிங் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது,

பாரீஸ் ஒலிம்பிக் எங்களுக்கு முக்கியமான தொடர். இது எங்களுக்கு சிறப்பானதாக அமையும். இந்த தொடரை இந்திய ஆக்கியின் ஜாம்பவான்களில் ஒருவரான பி.ஆர். ஸ்ரீஜேஷுக்கு அர்ப்பணிக்க விரும்புகிறோம். அவர் எங்கள் அனைவருக்கும் உத்வேகம் அளிக்கிறார்.

2016 ஜூனியர் உலகக் கோப்பையில் நாங்கள் பட்டம் வென்ற போது அவரது ஆலோசனைகள் உதவியது. அதை நான் இன்னும் மறக்கவில்லை. நிச்சயம் அவருக்காக நாங்கள் மீண்டும் ஒலிம்பிக் பதக்கம் வெல்ல விரும்புகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.



**இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்**
**கடனறி காட்சி யவர்**

**விளக்கம்:**

**ஒப்புரவு அறிந்து ஒழுதலாகியத் தன் கடமை அறிந்த அறிவை உடையவர், செல்வ வளம் இல்லாத காலத்திலும் ஒப்புரவுக்குத் தளர மாட்டார்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.